தினமணி

# "பாதுகாக்கப்பட்ட வேளாண் திட்டமே சிறப்பானது'

First Published : 08 Feb 2011 09:09:04 AM IST

தஞ்சாவூர், பிப். 7: பாதுகாக்கப்பட்ட வேளாண்மை திட்டம் அனைத்து வகையிலும் சிறப்பானதாகத் திகழ்கிறது என்றார் தென் ஆசிய தானியம் அமைப்பின் தலைமை இயக்குநர் டாக்டர் தாமஸ் லம்கின்.

தஞ்சாவூரை அடுத்த வாண்டையார்இருப்பு கிராமத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் கடலை சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்வெளியை திங்கள்கிழமை பார்வையிட்ட பிறகு அவர் அளித் பேட்டி:

பாதுகாக்கப்பட்ட வேளாண்மை திட்டம் 40 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கப்பட்டு விட்டது. தற்போது உலகெங்கும் 105 மில்லியன் ஹெக்டேர் நிலப்பரப்பில் இந்தத் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தில் 98 சதம் மானாவாரி வேளாண்மையாகவே மேற்கொள்ளப்படுகிறது. இந்த வகை வேளாண்மை மண்ணின் வளத்தைப் பெருக்கவும், மண்ணின் வளம் குன்றாமல் இருக்கவும் உதவுகிறது.

மானாவாரி மற்றும் இரவை விவசாயத்தில் நீர் மேலாண்மை செய்ய இந்தத் திட்டம் சிறப்பானது. மிகக் குறைந்த முதலீட்டில் பயிர் உற்பத்தி செய்து, அதிக லாபம் பெறுவதற்கு இந்த வகை வேளாண்மை முறை துணைபுரிகிறது.

தற்போது காலநிலை மாற்றத்தால் வேளாண்மையில் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. இதனால் ஏற்படும் பாதிப்புகளை இந்தத் திட்டம் குறைக்கிறது. இயற்கை வளத்தையும், சுற்றுச்சூழலையும் பாதுகாக்கும் இந்த வேளாண்மை திட்டத்தை அனைத்து விவசாயிகளிடமும் பரவச் செய்ய வேண்டும் என்றார் தமாஸ் லம்கின்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் இந்தத் திட்டத்தின் கீழ் உஸ்மான்சோழை, தலைவாய்ப்பட்டி, களிமேடு கிராமங்களில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தென் ஆசிய தானியம் அமைப்பின் அதிகாரி ச. ஜெயராமன், பயிர் துறை உழவியல் நிபுணர் எம்.எஸ். ஜாட், முதன்மை நிர்வாகி எம். ஸ்ரீ0னிவாசராவ், ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குநர் டி. ஜெயராஜ், மண் மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி நிலையத் தலைவர் பா. சந்திரசேகரன் ஆகியோர் இந்தத் திட்டத்தின் கீழ் சாகுபடி செய்யப்பட்டுள்ள வயல்களை பார்வையிட்டனர்.

**மேட்டூர் அணை நீர்மட்டம்: 109.71 அடி**

First Published : 08 Feb 2011 09:10:25 AM IST

தஞ்சாவூர், பிப். 7: மேட்டூர் அணை நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 109.71 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 1,319 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது.

அணையில் இருந்து வினாடிக்கு 1,600 கன அடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

**விலை உயர்வு: அரசுக்கு களங்கம் ஏற்படுத்த முடியாது-எ.வ. வேலு**

First Published : 08 Feb 2011 02:56:01 AM IST

Last Updated : 08 Feb 2011 06:16:56 AM IST



சென்னை, பிப்.7: உணவுப் பொருள்களின் விலை குறைந்துள்ள நிலையில், விலைவாசி உயர்வு என்று கூறி மாநில அரசுக்கு களங்கம் ஏற்படுத்த முடியாது என்று உணவுத் துறை அமைச்சர் எ.வ. வேலு கூறினார்.

தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட் மீதான பொது விவாதம் பேரவையில் திங்கள்கிழமை நடைபெற்றது. விவாதத்தில் பேசிய அதிமுக உறுப்பினர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி (கலசப்பாக்கம்), உணவுப் பொருள்களின் விலைப் பட்டியலை வாசித்தார்.

அதிமுக ஆட்சியில் அந்தப் பொருள்களின் விலையும், இப்போது அவற்றின் விலையும் அவர் வாசித்தார். உணவுப் பொருள்களின் விலை பலமடங்கு அதிகரித்துள்ள நிலையில், தமிழக அரசு அதுதொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அவர் கூறினார்.

இதற்கு பதிலளித்து அமைச்சர் எ.வ.வேலு பேசியது:

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அதன்காரணமாக, மக்களுக்கு குறைந்த விலையில் உணவுப் பொருள்கள் கிடைப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அதிமுக ஆட்சியிலும் விலைவாசி உயர்வு பல சந்தர்ப்பங்களில் அதிகரித்துள்ளது. பேரவையில் ஆளுநர் உரையாற்றியபோது, பல்வேறு காரணங்களால் உணவுப் பொருள்களின் விலை அதிகமாக இருந்தது. ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல பிப்ரவரி மாதம் வந்தவுடன்

பொருள்களின் விலை பெரும்பாலும் குறைந்துள்ளது.

இந்த நிலையில், விலைவாசி உயர்வு என்று கூறி இந்த அரசுக்கு களங்கம் ஏற்படுத்த முடியாது என்றார் வேலு.

அப்போது பேசிய அமைச்சர் பரிதி இளம் வழுதி, "வெங்காயத்தின் விலை வெகுவாக குறைந்து கிலோ ரூ.30-க்கு விற்பனை செய்யப்படுகிறது. என்னுடன் வந்தால் ரூ.20-க்கு ஒரு கிலோ வெங்காயம் வாங்கித் தருகிறேன்' என்றார்.

**வெல்லம் விலை கடும் சரிவு: கரும்பு விவசாயிகள் கவலை**

First Published : 07 Feb 2011 12:55:53 PM IST

பரமத்தி வேலூர், பிப். 6: பரமத்தி வேலூர் தாலுகா, பிலிக்கல்பாளையம் சந்தையில் வெல்லம் விலை கடுமையாக சரிந்துள்ளது. இதனால் கரும்பு பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

காவிரி கரையோரப் பகுதிகளான சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், கண்டிபாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் கரும்புகள் அந்தந்த பகுதியில் உள்ள கரும்பு ஆலைகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது.

கரும்பு ஆலைகளில் இருந்து அச்சு வெல்லம், உருண்டை வெல்லம் ஆகியவை தயார் செய்யப்படுகிறது. தயார் செய்யப்பட்ட வெல்லங்கள் 30 கிலோ கொண்ட தனித்தனி சிப்பங்களாக கட்டப்பட்டு பிலிக்கல்பாளையத்தில் உள்ள வெல்ல ஏல சந்தைக்கு அனுப்பப்படுகிறது.

அவைகள் தரம் பிரிக்கப்பட்டு பின்னர் ஏலம் விடப்படுகிறது. கடந்த மாதம் உருண்டை வெல்லம் சிப்பம் ஒன்று (30 கிலோ) ரூ.900 முதல் ரூ. 1000 வரை ஏலம் போனது. அச்சு வெல்லம் ரூ.1000 முதல் ரூ.1200 வரை ஏலம் போனது.

சனிக்கிழமை வெல்ல சந்தைக்கு அச்சு வெல்லம் 8 ஆயிரம் சிப்பங்களும், உருண்டை வெல்லம் 6 ஆயிரம் சிப்பங்களும் வந்திருந்தன. உருண்டை வெல்லம் ரூ.600 முதல் ரூ.630 வரை ஏலம் போனது. அச்சு வெல்லம் ரூ.550 முதல் ரூ.700 வரை ஏலம் போனது. இந்த கடும் விலை சரிவு காரணமாக கரும்பு பயிரிட்டுள்ள விவசாயிகள் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

**பழங்களின் கண்காட்சி**

First Published : 07 Feb 2011 10:55:42 AM IST

ராஜபாளையம், பிப். 6: ராஜபாளையம் சத்தியா வித்யாலயாவில் நிறங்கள் தினவிழா நடைபெற்றது.

பள்ளித் தாளாளர் குமரேசன் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் ராதாபாய் முன்னிலை வகித்தார்.

பல நிறங்களில் பழங்கள்,பூக்கள்,காய்கறிகள்,அலங்காரப் பொருள்கள், பொம்மைகள் காட்சியாக வைக்கப்பட்டிருந்தன.

பழங்கள், காய்கறிகள் இவற்றின் நிறங்களை விளக்கி, இவற்றைச் சாப்பிடுவதால் ஏற்படும் பலன்கள் குறித்து ஆசிரியர்கள் எடுத்துக் கூறினர். இதில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

தினமலர்

**அறுவடை தாமதம் முந்திரி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,00:04 IST

பண்ருட்டி : முந்திரி அறுவடை தாமதம் காரணமாக, முந்திரி பயிர் விலை உயர்ந்தது. தமிழகத்தில் கடலூர் மாவட்டம் பண்ருட்டி, கன்னியாகுமரி, தேனி மாவட்டத்தில் முந்திரி உற்பத்தி கடந்தாண்டை விட கணிசமாக குறைந்தது. இதன் காரணமாக, கடந்தாண்டு, 80 கிலோ எடை கொண்ட முந்திரி கொட்டை, 3,600 ரூபாய் வரை விற்றது. தற்போது படிப்படியாக உயர்ந்து கடந்த ஆகஸ்டில், 5,000 ரூபாய் வரையும், அரசு இலவச பொங்கல் பொருட்கள் அறிவிப்பு காரணமாக, 6,000 ரூபாயாகவும் உயர்ந்தது. இதன் காரணமாக, முந்திரி பயிர் ரகங்கள் ஒரு கிலோவிற்கு, 30 முதல், 50 ரூபாய் விலை உயர்ந்தது. புதிய முந்திரி தேனி, நாகர்கோவிலில் ஜனவரியில் துவக்கம் முதல் அதிகளவில் அறுவடைக்கு வரும் என வியாபாரிகள் முகாமிட்டனர். ஆனால், மழை மற்றும் அறுவடை தாமதம் காரணமாக, 20 நாட்கள் தள்ளிப் போனதால் முந்திரி வரத்து குறைந்தது.

இருப்பில் உள்ள 80 கிலோ முந்திரி கொட்டை 6,700ம், புதிய ஈர ரக கொட்டை, 7,200ம் விற்பனையாகிறது. முந்திரி பயிர் ஒரு கிலோ, 240 ரகம், 420 ரூபாயும், 320 ரகம், 380, ஜே.எச்.,ரகம், 340ல் இருந்து 370, எஸ்.ரகம், 330ல் இருந்து 370, பட்ஸ் ரகம், 310லிருந்து 345, எல்.டபிள்யூ.பி.300லிருந்து 330, எஸ்.டபிள்யூபி ரகம், 225லிருந்து 260, ஆவரேஜ், 310லிருந்து 330 ரூபாயாக உயர்ந்துள்ளது. கடந்த ஒரு ஆண்டில் இரு மடங்கு கொட்டை விலை உயர்ந்த

நிலையில், முந்திரி பயிர் விலை மட்டும் உலகச் சந்தையில் உயராததால் ஏற்றுமதி முற்றிலும் பாதித்துள்ளது.

**புவி வெப்பமாதல் குறித்த விழிப்புணர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,00:09 IST

சிதம்பரம் : சிதம்பரம் அக்னி சிறகுகள் எழுச்சி இயக்கம் சார்பில் சிதம்பரம் பள்ளி மாணவர்களுக்கு புவிவெப்பமயமாதல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. சிதம்பரம் சரசு மெட்ரிக் பள்ளியில் நடந்த முகாமை பள்ளி தாளாளர் முருகன் துவக்கி வைத்தார். இயக்க நிர்வாகிகள் சுகன்ராஜ், வினோத்குமார் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் பாக்கியராஜ் வரவேற்றார். ஒருங்கிணைப்பாளர் குபேரன் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் புவி வெப்பமயமாதல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேசினார். பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் நடப்பட்டது. ஆசிரியர்கள் தேன்மொழி, ஜெயலட்சுமி, சுந்தரமூர்த்தி பங்கேற்றனர்.

**வருடம் முழுவதும் வருமானம் வரும்படி விவசாயம் செய்ய வேண்டும்: கலெக்டர்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,00:09 IST

நெல்லிக்குப்பம் : மேல்பட்டாம்பாக்கத்தில் உழவர் மன்ற துவக்க விழா நடந்தது. நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ராஜகோபாலன் தலைமை தாங்கினார். மன்றத் தலைவர் வெங்கடபதி வரவேற்றார். உழவர் மன்றத்தை கலெக்டர் சீத்தாராமன் துவக்கி வைத்து தமிழ்நாடு காகித நிறுவனம் மூலம் விவசாயிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கினார். ஒப்பந்த சாகுபடி முறையில் சவுக்கு பற்றி காகித ஆலை முதுநிலை மேலாளர் சீனிவாசன், துல்லிய பண்ணை திட்டம் குறித்து பாச்சா பேசினார். மன்ற தலைவர்கள் கார்மாங்குடி வெங்கடேசன், ரவீந்திரன், வேல்முருகன், விஜயகுமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

விழாவில் கலெக்டர் சீத்தாராமன் பேசியதாவது: சுய உதவிக்குழு மகளிர்கள் நிலங்களை குத்தகைக்கு வாங்கி விவசாயம் செய்து முன்னேறலாம். ஈரோடு விவசாயிகள் துல்லிய பண்ணை முறையில் காய்கறி சாகுபடி செய்து ஒரு ஏக்கரில் 150 டன் மகசூல் எடுக்கின்றனர். முன்னோடி விவசாயிகளை அழைத்து அவர்களின் அனுபவங்களை கேட்டு பயன்பெற வேண்டும். வருடம் முழுவதும் வருமானம் வரும்படி பல்வேறு பயிர்களை பயிரிட வேண்டும். விவசாயிகள் விவசாயம்

செய்து தாங்களும் வளர்ந்து சமுதாயத்துக்கும் பயன் பட வேண்டும்.இவ்வாறு கலெக்டர் சீத்தாராமன் பேசினார்.

**ராஜராஜன்-1000 நெல் சாகுபடி முறை மொளசூர் கிராமத்தில் செயல்விளக்கம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,00:44 IST

திண்டிவனம் : திண்டிவனம் அடுத்த மொளசூர் கிராமத்தில் ராஜராஜன்-1000 நெல் சாகுபடி முறையில் மகசூலை அதிகரிக்கும் செயல்விளக்கம் நடந்தது. திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் நல்லாவூர் உபவடி நீர்ப்பாசன நீர்வள நிலவளத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏரிப்பாசன விவசாயிகளுக்கு ராஜராஜன்-1000 நெல் சாகுபடி முறையில் மகசூலை அதிகரிக்கும் செயல்விளக்கம் மொளசூர் கிராமத்தில் நடந்தது. இந்த நெல் சாகுபடிக்கு தேவையான இடுபொருட்கள், விதை
மற்றும் உரங்கள் வேளாண் அறிவியல் நிலையம் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சிகள், செயல் விளக்கங்களை விஞ்ஞானிகளின் அளித்து வருகின்றனர். மேலும் ஆலோசனைகள் மற்றும் இதர விபரங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகிறது.

இம்முறையில் பயிர் செய்யப்பட்ட நெல் சாகுபடியின் அறுவடை, விதைப்புக் கருவி மூலம் உளுந்து விதைப்பு வயல் விழா மரக்காணம் வட்டம் மொளசூர் கிராமத்தில் நடந்தது. முன்னோடி விவசாயி ராமநாதன் வயலில் நடந்த விழாவில் திண்டிவனம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா கலந்து கொண்டு, ராஜராஜன் 1000 நெல் சாகுபடி குறித்து விதைப்புக் கருவி மூலம் செயல்விளக்கம் அளித்தார். இந்த விதைப்புக் கருவி விவசாயிகளுக்கு நாள் ஒன்றுக்கு 1000 ரூபாய் கட்டணத்தில் வாடகைக்கு அளிக்கப்படுவதாக சாத்தையா தெரிவித்தார். விழா ஏற்பாடுகளை வட்டார ஆராய்ச்சியாளர்கள் ஆறுமுகம், இளங்கோ செய்திருந்தனர்.

**காட்டூரில் நெல் கொள்முதல் நிலையம்: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,02:14 IST

திருச்சி: திருச்சி கலெக்டர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர் கூட்டம் நேற்று நடந்தது. டி.ஆர்.ஓ., ராமன் தலைமை வகித்து மனுக்களை பெற்றுக் கொண்டார். திருச்சி, பாலக்கரை ரவுண்டானாவில் மறைந்த சினிமா நடிகர் சிவாஜி சிலை வைக்க வேண்டும் என சிலர் மாநகராட்சியில் கோரிக்கை விடுத்துள்ளனர். இதற்காக அந்த இடத்தை மாநகராட்சி அதிகாரிகள் பார்வையிட்டுள்ளனர். அந்த இடத்தில் சிவாஜி மன்றத்தினர் நேற்று பூமி பூஜை போட்டனர். இதற்கு த.மு.மு.க.,வினர் எதிர்ப்பு

தெரிவித்துள்ளனர். கலெக்டர் அலுவலகத்துக்கு வந்த த.மு.மு.க., நிர்வாகிகள் அப்துல் ஹக்கீம், இப்ராகிம்ஷா, பொரோஸ்கான் டி.ஆர்.ஓ.,விடம் மனு அளித்தனர்.

பின்னர் அவர்கள் கூறுகையில், ""அரசியல் கட்சி தலைவர்கள் சிலை வைப்பதால் தான் அடிக்கடி பிரச்னை வருகிறது. எனவே, அங்கு சிவாஜி சிலை வைக்கக் கூடாது. தென்னூரை சேர்ந்த அப்துல்மஜீத் கார்கில் போரில் வீரமரணமடைந்தார். எனவே, மறைந்த கார்கில் போர் வீரர் அப்துல்மஜீத் பெயரை ரவுண்டானாவுக்கு வைக்க வேண்டும்," என்றனர்.

* தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் நடராஜன் கொடுத்த மனு: திருவெறும்பூர் வட்டத்தில் சகுபடி செய்துள்ள சம்பா நெல் பயிர்கள் அறுவடைக்கு தயராகி உள்ளது. காட்டூர் பாப்பாகுறிச்சி குவளைகுடி, கிழகுறிச்சி ஆகிய பகுதிகளில் தற்போது அறுவடை நடந்து வருகிறது. எனவே, விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்பனை செய்ய "காட்டூர், கிழகுறிச்சி, திருவெறும்பூர், வேங்கூர், பத்தாளப்பேட்டை, வாழவந்தான் கோட்டை, அசூர், நவல்பட்டு' ஆகிய இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும். குறிப்பாக காட்டூர், கிழகுறிச்சி ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைத்து விவசாயிகளை பாதுகாக்க வேண்டும்.

* அனைத்து இந்திய அரவாணிகள் உரிமைகள் மற்றும் மறுவாழ்வு மையம் இயக்குனர் மோகனா அளித்துள்ள மனு: அரசு மூலம் பல்வேறு சலுகைக திருநங்கைகளுக்கு கிடைத்துள்ளது. ஆனால், பல திருநங்கைகளுக்கு வாக்காளர் அடையாள அட்டை இல்லை. எனவே, எங்கள் அமைப்பில் உள்ள திருநங்கைகளுக்கு "இதர' என்னும் காலத்தக்கு பதிலாக திருநங்கை என சேர்த்து வாக்காளர் அடையாள அட்டை வழங்க வேண்டும்.

* மார்க்சிஸ்ட் கட்சி அந்தநல்லூர் ஒன்றிய குழு சார்பில் அளிக்கப்பட்டுள்ள மனுவில், "அந்தநல்லூர் யூனியன் முத்தரசநல்லூர் பஞ்சாயத்தில் உள்ள அம்மன்நகரில் 25 வீடு உள்ளது. அப்பகுதியில் குடிநீர், மின்விளக்கு, குப்பை தொட்டி, சாலை வசதி போன்ற அடிப்படை வசதிகள் செய்து தரவேண்டும்' என கூறப்பட்டுள்ளது.

**கொள்முதல் நடைமுறையில் மாற்றம் முடங்கும் பாரம்பரிய தொழில்கள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,00:10 IST

சின்னாளபட்டி : பாரம்பரிய தொழில்களை புனரமைத்து பாதுகாக்கும் மத்திய அரசின் திட்டத்தை முடக்கும் வகையில் மாநில அரசின் செயல்பாடு உள்ளது. நமது நாட்டின் வரலாற்று சிறப்பிற்கு அடிப்படையாக விளங்கும் பாரம்பரிய தொழில்கள் ஏராளமாக உள்ளன. நவீன அறிவியல் வளர்ச்சி, உலகமயமாக்கல் போன்றவற்றால் பாரம்பரிய தொழில்கள் நலிவடைய துவங்கின. இதனை தவிர்த்து பாரம்பரிய தொழில்களை புனரமைத்து பாதுகாக்க "ஸ்பூர்த்தி' என்ற திட்டத்தை

மத்திய அரசு அமலாக்கியது. இதன் கீழ் மூலிகை சேகரிப்பு,சித்தா,ஆயுர்வேத மருந்து தயாரிப்புக்கென ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டது. தென் மாவட்டங்களில் இதற்கான செயலாக்க முகமையாக காந்திகிராமம் லட்சுமி சேவா சங்கம் இயங்கியது. பாரம்பரிய தொழில்களுக்கு புத்துயிர் அளிக்க மத்திய அரசின் திட்டம் உதவியாக இருந்தது. இதேசமயம், தமிழகத்தில் உள்ள அரசு ஆஸ்பத்திரிகளுக்கு சித்தா,ஆயுர்வேத மருந்துகள் கொள்முதல் செய்வதில் பின்பற்றப்பட்ட வழிமுறை திடீரென மாற்றப்பட்டது. 1985 முதல் மாநில அரசின் நிறுவனமான டாம்ப்கால், காந்திகிராமம் லட்சுமி சேவா சங்கம் ஆகியவற்றில் இருந்து மருந்துகள் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. இதற்கான பில் தொகையை நிறுவனங்களுக்கு வழங்குவதில் காலதாமதம் ஏற்பட்டு,உற்பத்தி நிறுவனங்கள் நிதிநெருக்கடி, கடன் சுமையில் தள்ளாடிய போதும் அரசு ஆஸ்பத்திரிகளுக்கு தடையின்றி மருந்துகள் அனுப்பப்பட்டன.இந்த நிலையில் 2004ல் நேரடி கொள்முதல் முறை கைவிடப்பட்டது.

ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் மருந்து கொள்முதல் என்ற புதிய நடைமுறை அமலாக்கப்பட்டது. இதில் பன்னாட்டு நிறுவனங்கள் குறைந்த விலைப்புள்ளி கொடுத்து ஒட்டுமொத்த ஆர்டர்களை கைப்பற்றின. இதற்கு ஈடுகொடுக்க முடியாத உள்நாட்டு நிறுவனங்கள் ஆர்டரை இழந்ததால், உற்பத்தியை குறைத்தாக வேண்டிய நிலை ஏற்பட்டது. பல நிறுவனங்கள் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டன. பாரம்பரிய தொழில்களை பாதுகாக்க ஒருபுறம் மத்திய அரசு நடவடிக்கை எடுத்துவரும் நிலையில், தமிழக அரசு கொள்முதல் நடைமுறையை மாற்றியதன் மூலம் சித்தா, ஆயுர்வேத மருந்து உற்பத்தி செய்யும் உள்நாட்டு சிறு நிறுவனங்கள் நலிவடைந்து நசித்து போகும் அவலம் ஏற்பட்டுள்ளது. இதேசமயம் அரசு நிறுவனமான டாம்ப்கால் நிறுவனத்திடம் மட்டும் தற்போதும் நேரடியாக மருந்துகள் கொள்முதல் செய்யப்படுகின்றன. சித்தா, ஆயுர்வேத மருந்து கொள்முதலில், ஒப்பந்தப்புள்ளி முறையை கைவிட வேண்டும். மீண்டும் நேரடி கொள்முதல் முறை அமலாக்கப்பட வேண்டும்.

**வற்றல் மிளகாய் விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 08,2011,01:43 IST

ஆத்தூர்: ஆத்தூர் பகுதிகளில் மிளகாய் உற்பத்தி குறைந்ததால், வற்றல் மிளகாய் கிலோ 90 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது.ஆத்தூர் சுற்றுவட்டார பகுதிகளான தலைவாசல், கெங்கவல்லி, வாழப்பாடி போன்ற பகுதிகளில் விளைவிக்கப்படும் பச்சை மிளகாய், வற்றல் மிளகாய் ஆத்தூர்,

தலைவாசலில் விற்பனை செய்யப்படுகிறது.
வாரந்தோறும் செவ்வாய் கிழமை தலைவாசல் மார்க்கெட்டுக்கு, பல்வேறு பகுதியிலிருந்தும் விவசாயிகள், வற்றல் மிளகாய் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். அங்கிருந்து சேலம், திருச்சி, மதுரை, சென்னை போன்ற பல்வேறு பகுதிகளுக்கு வியாபாரிகள் மூலம் அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த நவம்பர், டிசம்பரில் பெய்த மழையால், மிளகாய் செடிகளில் பூக்கள் உதிர்வு, அழுகல் ஏற்பட்டது. அதனால், சாம்பல், குண்டு ரகம் மிளகாய்கள் வரத்து குறைந்து கிலோ, 80 முதல் 90 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.ஆத்தூர் மிளகாய் விவசாயி கணேசன் கூறியதாவது:கடந்த இரு மாதங்களுக்கு முன் பெய்த கன மழையால் ஏக்கருக்கு, 15 டன் மிளகாய் மகசூல் உள்ளது. கடந்த டிசம்பர், ஜனவரியில் பச்சை மிளகாய் கிலோ, 20 முதல் 30 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. அதனால், வற்றல் மிளகாய்களுக்கு குறைந்தளவு விட்டுள்ளனர். தலைவாசல் மார்க்கெட்டுக்கு வற்றல் மிளகாய் வரத்து குறைந்து, விலை உயர்ந்துள்ளது.
இவ்வாறு அவர் கூறினார்.

**பாசன கருவிகள் வினியோகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,23:41 IST

சிவகங்கை : விவசாயிகளுக்கு சொட்டு நீர், தெளிப்பு நீர் பாசன கருவிகள் வழங்கப்படுகின்றன. விவசாய பொறியியல்துறை செயற்பொறியாளர் ராஜகோபால் கூறியது: மாவட்டத்தில் உலக வங்கி நிதி உதவியில் நீர், நிலவள திட்டம் செயல்படுகிறது. இதன் மூலம் கோட்டக்கரையாறு, மணிமுத்தாறு, கிருதுமால் வடிநிலப்பகுதி பாசன நிலங்களில் திட்டப்பணிகள் நடக்கின்றன. பாசன மேலாண்மை மூலம் நீர் சிக்கனத்தை கடைபிடித்து, மொத்த பாசன பரப்பும் விவசாய சாகுபடிக்கு பயன்படுத்தப்படும். விவசாய பொறியியல் துறை மூலம் முழு மானியத்தில் சொட்டு நீர் பாசனம், தெளிப்பு நீர் கருவிகள், நீர் உபயோகிப்பாளர் சங்கம் மூலம் வழங்கப்படும்.

இதற்கு அரசு 1.42 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்நிதியில் மணிமுத்தாறு வடிநில பகுதியில் 100; கோட்டக்கரையாறில் 60; கிருதுமால் வடிநில பகுதியில் தலா ஒரு எக்டேர் நிலத்தில், சொட்டு நீர் பாசன கருவிகள் அமைக்கப்படும். நீர் உபயோகிப்பாளர் சங்கங்களுக்கு தெளிப்பு நீர் பாசன கருவிகள் 375 இலவசமாக தரப்படும். இதில், ஆதிதிராவிட விவசாயிகளுக்கு முன்னுரிமை உண்டு. மணிமுத்தாறு பகுதி நீர் உபயோகிப்பாளர் சங்க விவசாயிகள் பெயர், முகவரி, நில விபரங்களை காரைக்குடி, உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திலும் (97887 63833), கோட்டக்கரையாறு, கிருதுமால் நீர் உபயோகிப்பாளர் சங்கங்கள் சிவகங்கை, தொண்டி ரோட்டில்

உள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை (04575- 240 288) தொடர்பு கொண்டு பயன் அடையலாம், என்றார்.

**நெல் விவசாயிகளுக்கு புதிய திட்டங்கள் அறிமுகம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,23:11 IST

ஆனைமலை: ஆனைமலையை சுற்றியுள்ள பகுதிகளில் நெல் அதிக அளவில் பயிரிடப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு தமிழக வேளாண்மை விரிவாக்க மையம் இரண்டு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆனைமலை ஒன்றிய வேளாண்மை உதவி இயக்குனர் உமாராணி கூறியதாவது: ஆனைமலையை சுற்றியுள்ள பகுதிகளில் 2,600 ஏக்கர் பரப்பளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பகுதியில் தற்போது நெல் நடவு முடிந்து 45 நாட்களுக்கு மேல் ஆகிவிட்டது. தமிழ்நாடு வேளாண்மை விரிவாக்க மையம் இரண்டு புதிய திட்டங்களை விவசாயிகளுக்கு அறிமுகம் செய்துள்ளது. ஒருங்கிணைந்த சிறு தானிய அபிவிருத்தி திட்டம், தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டம். ஒருங்கிணைந்த சிறு தானிய அபிவிருத்தி திட்டத்தில் ராஜ ராஜன் செயல் விளக்க திடல் அமைக்க, உரிய விதை, உயிர் உரம், நுண்ணூட்டங்கள், களை அகற்றும் கருவி ஆகிய இடு பொருட்கள் ஒரு ஏக்கருக்கு 3,000 ரூபாய் வினியோகிப்படும். தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இடு பொருட்களை மானியத்துடன் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து விவசாயிகள் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம் என்றார்.

**நிலக்கடலை வரத்து அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,23:18 IST

அவிநாசி: சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று நடந்த நிலக்க டலை ஏலத்துக்கு, 750 மூட்டை வரத்தாக இருந்தது. நிலக்கடலை (காய்ந் தது) முதல் ரகம் குவிண் டாலுக்கு ரூ.3,350 முதல் ரூ.3,420 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,000 முதல் ரூ.3,300 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,600 முதல் ரூ.2,850 வரை விலைக்கு போனது.
கண்காணிப்பாளர் கூறுகையில், "கடந்த வாரத்தை விட வரத்து சற்று உயர்ந்திருந்தது. விலையில் மாற்றமில்லை. ரூ.7 லட்சத் துக்கு வர்த்தகம் நடந் தது,' என்றார்.

**மரம் வளர்ப்பில் ஈடுபடும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,23:17 IST

பொங்கலூர்:பொங்கலூர் வட்டாரத்தில் காய்கறி மற்றும் உணவு தானியங்களை பயிரிட்டு வந்த விவசாயிகள், தற்போது மர வகைகளை பயிர் செய்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். ஆட்கள் பிரச்னை, உரம், மருந்து விலையேற்றம், விளைபொருட்களுக்கு கட்டுப்படியான விலை கிடைக்காமை போன்ற காரணங்களால், விவசாயிகள் உணவுப்பொருட்கள் பயிரிடுவதை குறைத்து வருகின்றனர். இப்பகுதியில் தென்னை வளர்ப்பே பிரதானமாக மேற்கொள்ளப்படுகிறது. தென்னை மரங்கள் பரவலாக பயிர் செய்யப்பட்டிருந்தாலும், இதற்கு தண்ணீர் அதிகம் தேவைப்படுகிறது.

இதனால், தண்ணீர் குறைவாக உள்ள இடங்களில் தென்னையை பயிரிட முடியாத நிலை உள்ளது. மேட்டுப்பாங்கான நிலங்களை வைத்துள்ள விவசாயிகள், மா, கொய்யா, இலவம் பஞ்சு, புளி போன்ற மரங்களை வளர்ப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். இன்னும் சிலர், சவுக்கு, குமிழ் போன்றவற்றை பயிரிடுவதில் ஈடுபட்டுள்ளனர். விவசாயிகள் கூறுகையில், "பழ மரங்கள் சாகுபடி செய்தால், சில ஆண்டுகள் கழித்து ஆண்டுக்கு ஒரு முறை மகசூல் கிடைக்கும். இதை மார்க்கெட்டில் விற்பதில் சிரமம் ஏற்படும். மற்ற மர வகைகள் ஒரு முறை பயிர் செய்தால், 10 ஆண்டுகள் கழித்து மொத்தமாக வெட்டி விற்பனை செய்யலாம். உணவு பண்டங்களை விளைவிப்பதை காட்டிலும் மர வகைகளில் நல்ல வருமானம் கிடைக்கிறது,' என்றனர்.

**விதை சங்கத்தின் பொதுக்குழு கூடியது**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 07,2011,23:16 IST

தாராபுரம்: தமிழ்நாடு விதை சங்கத் தின் பொதுக்குழு கூட்டம் நடந்தது. "ராசி சிட்ஸ்' நிறுவன மேலாண் நிறுவன இயக்குனர் ராமசாமி தலைமை வகித்தார். தமிழ் நாடு விதை சங்க மாநில செயலாளர் காளிதாஸ், சங்க செயல்பாடுகளை விளக் கினார். துணை தலைவர் மகுடபதி முன்னிலை வகித்தார். "வேளாண் விளைபொருட்களுக்கு மத்திய - மாநில அரசுகள் வழங்கும் குறைந்தபட்ச ஆதார விலையை, நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு சன்ன ரகம் ரூ.1,500 , மோட்டா ரகம் ரூ.1,400 என்று உயர்த்தி வழங்க வேண்டும். மொத்த விதை உற் பத்தியை 60 சதவீதத் துக்கு மேல் பங்களிப்பை வழங் கும் கோவை, ஈரோடு, திருப்பூர், சேலம் மாவட் டங்கள் உள்ளடக் கிய மேற்கு மண்டலத்தை சிறப்பு விதை உற்பத்தி மண்டலமாக தமிழக அரசு அறிவிக்க வேண்டும்,' என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. விதை சங்க பொருளாளர் ராமசாமி நன்றி கூறினார்.

**தினத் தந்தி**

## மும்பை சந்தையில் முதல் வர்த்தகத்தில் ஒரு அல்போன்சா மாம்பழம் ரூ.600–க்கு விலை போனது



ஜெயஸ்ரீ போஸ்லே – ராம் சேகல்

பூனா / மும்பை

நடப்பு 2011–ஆம் ஆண்டின் முதல் வர்த்தகத்தில், மும்பை சந்தையில் ஒரு அல்போன்சா மாம்பழம் இதுவரை கண்டிராத வகையில் ரூ.600–க்கு விலை போனது.

மாம்பழங்களில், அல்போன்சா வகை மிகவும் உயர்ந்த தரம் வாய்ந்ததாகும். இது, மாம்பழங்களின் அரசன் என்று அழைக்கப்படுகிறது. சென்ற ஜனவரி மாதத்தில், மும்பையின் கிராவ் ஃபோர்ட் சந்தையில், முதலில் விற்பனைக்கு வந்த நான்கு டஜன் அல்போன்சா மாம்பழங்கள் ரூ.28,000–க்கு விற்பனை செய்யப்பட்டன. அதாவது, ஒரு டஜன் ரூ.7,000–க்கு விலை போனது. இதன் அடிப்படையில், ஒரு பழம் ரூ.583–க்கு விற்பனையாகி உள்ளது.

பூனா

பூனாவில், வேளாண் விளைபொருள் சந்தைப்படுத்துதல் குழுவால் 40 அல்போன்சா மாம்பழங்கள் ஏலம் விடப்பட்டன. இதனை ரூ.11,111–க்கு ரவ்சாகேப் குஞ்சிர் என்ற

வெளிநாடு வாழ் இந்தியர் ஏலத்தில் வாங்கி உள்ளார். இதன்படி, ஒரு மாம்பழத்தின் சில்லரை விலை சராசரியாக ரூ.450 ஆகும்.

இது குறித்து குஞ்சிர் கூறும்போது, "அல்போன்சா மாம்பழங்கள் விலை மிகவும் உயர்வாக உள்ள போதிலும், வெளிநாடுகளுக்கு உறவினர்களை பார்க்கச் செல்பவர்கள், இவ்வகை மாம்பழங்களை வாங்கிச் செல்வது வழக்கமாகும்" என்று தெரிவித்தார்.

மாம்பழ சீசன்

பொதுவாக, அல்போன்சா மாம்பழ சீசன் ஒவ்வொரு ஆண்டிலும் ஏப்ரல் மாதத்தில் தொடங்கும். நடப்பு சீசனில் 2–3 மாதங்களுக்கு முன்பாக இந்த பழங்களில் சில விற்பனை வந்துள்ளன. இந்த மாம்பழங்களை பிரபலப்படுத்தும் வகையில், முதல் வர்த்தக்தில் அதிக விலை கொடுக்கப்பட்டுள்ளது என்று பூனாவைச் சேர்ந்த திராட்சை மற்றும் மாம்பழ வர்த்தகர் ஒருவர் தெரிவித்தார். எனவே, இந்த வர்த்தகத்தின் வாயிலாக அதிக லாபம் கிடைக்க வாய்ப்பில்லை என்று அவர் தெரிவித்தார்.

சென்ற ஆண்டில், முதலில் சந்தைக்கு வந்த மாம்பழங்கள் ரூ.4,500–க்கு (ஒரு டஜன்) விற்கப்பட்டன. இவ்வாண்டு அல்போன்சா மாம்பழ வரத்து குறைந்துள்ளதால், சென்ற ஆண்டைக் காட்டிலும் 50 சதவீதம் அதிக விலைக்கு இவ்வகை மாம்பழங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

நடிகர்–நடிகைகள்

மும்பையில், முதலில் விற்பனைக்கு வரும் மாம்பழங்களை அரசியல் வாதிகள், நடிகர், நடிகைகள் மற்றும் கோடீஸ்வரர்கள் வாங்குகின்றனர் என பிரகாஷ் பேங்க் என்ற வர்த்தக பிரமுகர் தெரிவித்தார்.

இவ்வகை மாம்பழங்கள் அறிமுகமாகும்போது, அவற்றை பெரிய நிறுவனங்கள், வைர வியாபாரிகள் போன்றவர்கள் வாங்குகின்றனர் என்று மும்பை கிராவ்ஃபோர்டு சந்தையின் யோகேஷ் டோல் தெரிவித்தார்.

இதனையடுத்து, அல்போன்சா மாம்பழம் பொதுமக்களுக்கு எட்டாக்கனியாகி விடுமோ என்ற கேள்வி எழுந்துள்ளது. இது குறித்து தேசாய் என்ற வர்த்தக பிரமுகர் கூறுகையில், "அல்போன்சா மாம் பழம் மார்ச் மாதத்தில் சந்தைக்கு வரத் தொடங்கும். அப்போது ஒரு டஜன் ரூ.2,000–3,000 என்ற விலையில் கிடைக்கும். நடப்பு பருவத்தில் விளைச்சல் நன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, ஏப்ரல் மாதத்தில் முழுவீச்சில் இப்பழங்கள் சந்தைக்கு வரும். அப்போது பொதுமக்கள் வாங்கக்கூடிய அளவில் விலை குறைய வாய்ப்புள்ளது" என்று தெரிவித்தார்.

**விவசாயிகளின் நலனுக்காக வெங்காயம் போன்ற காய்கறிகளின் விலை ஏறுவது நல்லதுதான் சட்டசபையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. பேச்சு**

*சென்னை, பிப்.8–*

*விவசாயிகளின் நலனுக்காக வெங்காயம் உள்ளிட்ட காய்கறிகளின் விலை ஏறுவது நல்லதுதான் என்று சட்டசபையில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. தண்டபாணி பேசினார்.*

*நில ஆக்கிரமிப்பு*

*தமிழக சட்டசபையில் இடைக்கால பட்ஜெட் மீது எம்.எல்.ஏ.க்கள் நடத்திய வாதமும், அமைச்சர்கள் குறுக்கிட்டு அளித்த பதிலும் வருமாறு:–*

*டி.மூர்த்தி (திருப்போரூர், பா.ம.க.):– பாலாற்றின் குறுக்கே ஆங்காங்கே தடுப்பணை கட்ட வேண்டும். கடல்நீரை குடிநீராக்கும் திட்டத்தை எனது தொகுதியின் அனைத்து கடலோர கிராமங்களுக்கும் விரிவுபடுத்த வேண்டும். சட்டம் ஒழுங்கு பிரச்சினைகளை தவிர்ப்பதற்காக விழாக் காலங்களில் டாஸ்மாக் கடைகளை மூட உத்தரவிட வேண்டும். வறுமை கோட்டின் கீழ் வசிப்பவர் எண்ணிக்கையை மீண்டும் கணக்கெடுக்க வேண்டும். அரசு நிலங்களை தனியார் ஆக்கிரமிப்பதை தடுக்க வேண்டும். கேளம்பாக்கம் அருகே சிவசங்கரபாபா அரசுக்குச் சொந்தமான ரூ.30 கோடி மதிப்புள்ள ஏழரை ஏக்கர் நிலத்துக்கு இலவச பட்டா பெற்றுள்ளார். அதுபோல் எனது தொகுதியில் சில தனியார் என்ஜினீயரிங் கல்லூரிகளுக்கு அரசு நிலம் இலவசமாக வழங்கப்பட்டு உள்ளன. இந்த நிலத்தை மீட்டு, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஏழைகளுக்கு அவற்றை வழங்க வேண்டும். மறைமலைநகரில் அனைத்து அரசு பஸ்களும் நின்று செல்ல உத்தரவிட வேண்டும்.*

*குறை தீர்க்கும் அறிவிப்பு*

*ஜான் ஜோசப் (விளவங்கோடு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு):– இலங்கை கடற்படையினரால் மீனவர்கள் கொல்லப்படுவதை தடுப்பதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கவில்லை. வெள்ள சேதத்தை மதிப்பிட மத்திய குழு வந்து சென்றது. ஆனால் நிதி இன்னும் வரவில்லை. பால் கொள்முதல் விலையை உயர்த்துவது, பால் கூட்டுறவு சங்கப் பணியாளர்களை நிரந்தரம் செய்வது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து பால் உற்பத்தியாளர்கள் போராட்டத்தை தொடங்கியுள்ளனர்.*

*பால்வளத்துறை அமைச்சர் மதிவாணன்:– பால்கூட்டுறவு சங்கங்களில் 11 ஆயிரம் ஊழியர்கள் பணியாற்றுகின்றனர். உரியமுறையில் பணிக்கு வரவில்லை என்பதால்*

அவர்களை நிரந்தரப்படுத்த அரசுக்கு அதிகாரம் இல்லை என்று சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்துவிட்டது. ஆனால் அவர்களின் குறைகளை தீர்ப்பதற்காக ஊதிய உயர்வை முதல்–அமைச்சர் அறிவித்துள்ளார்.

வாய்ப்பை ஏற்படுத்தும் முகாம்

ராமசாமி (ஸ்ரீவில்லிபுத்தூர், இந்திய கம்யூனிஸ்டு):– கடந்த 5 ஆண்டுகளில் இலவசங்களைப் பெறும் ஏழைகள் அதிகரித்துவிட்டனர். இந்தியா முழுவதும் தற்கொலை செய்துகொண்ட 43 ஆயிரம் விவசாயிகளில் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் 3 ஆயிரம் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. நதிகள் இணைப்பு என்று தொடக்கத்தில் பேசினார்கள். ஆனால் இந்த ஆண்டு காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளில் இருந்து பல டி.எம்.சி. தண்ணீர் கடலில் கலந்து வீணாகிவிட்டது.

முகாம்களில் இளைஞர்களின் கூட்டங்களை பார்க்கும்போது வேலை வாய்ப்புகள் இல்லாமல் போய்விட்டது என்று தெரிகிறது.

நிதி அமைச்சர் க.அன்பழகன்:– மாவட்டம் தோறும் வேலை வாய்ப்பு முகாம்களை நடத்துவது, அந்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்துவதற்காகத்தான். அதை குறைபட பேசக்கூடாது.

தனிநபர் வருமானம்

ராமசாமி:– இந்திய கடல் எல்லைப் பகுதியில் இதுவரை 572 மீனவர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ஆயிரத்து 200 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். 600 படகுகள், 300 விசைப் படகுகள் சேதமடைந்துள்ளன. இந்த சம்பவங்களினால் அடைந்த சேதாரத்தின் மதிப்பு 25 ஆயிரத்து 522 கோடி ரூபாயாகும். மத்திய அரசுடன் இணைந்திருக்க வேண்டும் என்பதற்காக சில நடவடிக்கைகளை எடுப்பதில்லை. தனிநபர் வருமான பெருகியிருப்பதாக கூறுகிறார்கள். அப்படி ஒரு தோற்றம்தான் தெரிகிறது. இரவு வேளை சாப்பாடு இல்லாமல் 40 சதவீதம் பேர் நாட்டில் இருக்கும்போது தனிநபர் வருமான பெருக்கம் எப்படி இருக்க முடியும்?

ஞானதாஸ் (சிவகாசி, ம.தி.மு.க.):– மீனவர் கொலையில் இலங்கை அரசை கண்டிக்க மத்திய மாநில அரசுகள் முன்வரவில்லை. கச்சத்தீவை மீட்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நெல்லை, தூத்துக்குடி, மதுரை ஆகிய தென்மாவட்டங்களில் ஒருங்கிணைந்த தொழில் வளர்ச்சி திட்டத்தை கொண்டு வர வேண்டும்.

எது ஊதாரித்தனம்?

மாலைராஜா (நெல்லை, தி.மு.க.):– அறிவிக்கப்பட்ட அத்தனை திட்டங்களும் இந்த ஆட்சியில் நிறைவேற்றப்பட்டுவிட்டன. இந்த ஆட்சி ஊதாரித்தனமாக செயல்படுவதாக எதிர்க்கட்சியினர் குற்றம்சாட்டினர். கலர் டி.வி., கியாஸ் அடுப்பு, 3 முட்டைகள், உயர்

கல்வி, கலைஞர் காப்பீடு, 108 ஆம்புலன்ஸ் போன்ற திட்டங்கள் எல்லாம் ஊதாரித்தனமானதா? இந்த ஆட்சியில்தான் தொகுதிகளுக்குள் பயமில்லாமல் எம்.எல்.ஏ.க்கள் போக முடிகிறது.

கலியவரதன் (முகையூர், பா.ம.க.):– கிராமங்களில் டாஸ்மாக் கடைகளை மூட வேண்டும். மற்ற இடங்களில் டாஸ்மாக் கடைகள் செயல்படும் நேரத்தை குறைக்க வேண்டும். விவசாய உபகரணங்களுக்கு 50 சதவீத மானியம் அளிக்க வேண்டும். அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை 60–ஆக உயர்த்த வேண்டும். எந்திரங்களை பயன்படுத்தாமல் ஆட்களை வைத்து மணல் அள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெங்காய விலை ஏற்றம்

தண்டபாணி (வேடசந்தூர், காங்கிரஸ்):– சென்னை அரசு ஆஸ்பத்திரிக்கு ராஜீவ்காந்தி பெயரை வைத்ததற்கு முதல்–அமைச்சர் கருணாநிதிக்கு நன்றி. வெங்காயவிலை, தக்காளி மற்றும் பல காய்கறிகளின் விலை ஏறிவிட்டதாக கூறினர். உண்மைதான். இடைத்தரகர்களின் தாக்கம் இல்லாமல் இப்படி விலை ஏறுவது, விவசாயிகளுக்கு நல்லதுதான். விலைவாசி ஏற்றமும் ஆட்சிக்கு ஆட்சி மாறுபடத்தான் செய்யும். அதுபோல் வாங்கும் கூலியும் உயர்த்தப்படுகிறது. எனது தொகுதியில் ஆரம்பத்தில் 75 ரேஷன் கடைகள் இருந்தன. தற்போது அதன் எண்ணிக்கை 153–ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறு விவாதம் நடந்தது.

## பச்சை தேயிலைக்கு ரூ.13 விலை நிர்ணயம்

குன்னூர், பிப்.8–

பச்சை தேயிலைக்கு வார விலையாக ரூ.13 நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

சிறு விவசாயிகள்

நீலகிரி மாவட்டம் தேயிலை தொழிலை நம்பியுள்ள மாவட் டமாக உள்ளது. மாவட்டத்தில் உள்ள 60 ஆயிரம் சிறு தேயிலை விவசாயிகள் தேயிலை விவசா யத்தையே நம்பி உள்ளதால், இந்த நிலை இருந்து வருகிறது.

சிறு தேயிலை விவசாயிகள் தங்கள் தோட்டத்தில் அறு வடை செய்யும் பச்சை தேயிலையை மாவட்டத்தில் இயங்கி வரும் சிறு தேயிலை தொழிற்சாலைகளுக்கு வழங்கி வருகின்றனர். இவ்வாறு வழங்கப்படும் பச்சை தேயி லைக்கு வார விலை என்றும், மாத விலை என்றும் இரு விலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

விலை பகிர்மான திட்டம்

தேயிலையின் விலை வீழ்ச்சியின் போது பச்சை தேயிலைக்கு கட்டுபடியான விலை

வழங்க வேண்டும் என்று தேயிலை விவசாயிகள் கோரி வந்தனர். இதனை தொடர்ந்து மத்திய அரசின் தேயிலை வாரியம் விலை உயர்விற்கான பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி யது.

இதன் ஒரு திட்டம் விலை பகிர்மான திட்டம் ஆகும். இந்த திட்டத்தின் அடிப்படை யில் ஏலத்தில் தேயிலை தூள் விற்பனை விலையை கருத்தில் கொண்டு அதனை சிறு தேயிலை விவசாயிகளுக்கு விலை பகிர்ந்து கொடுக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டது.

வார விலை

இந்த திட்டத்தை ஒவ்வொரு தொழிற்சாலைகளும் பின்பற்ற தேயிலை வாரியத்தின் தென் மண்டல செயல் இயக்குனர் உத்தரவிட்டார். இதன்படி தற்போது விலை பகிர்மான திட்டத்தின்படி தொழிற் சாலைகள் தங்கள் விற்பனை விலையை அடிப்படையாக கொண்டு விவசாயிகளுக்கு வார விலை வழங்கி வருகின் றன.

விலை பகிர்மான திட்டத் தின் கீழ் தொழிற்சாலை களுக்கு தொழிற்சாலை பச்சை தேயிலையின் வார விலை வித்தியாசப்படுகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் தேயிலை ஏலத்தில் 3 ரூபாய் வரை விலை உயர்வு இருந்தது. ஆனால் கடைசி வாரத்தில் ஏலத்தில் மந்த நிலை நிலவி யதால் விலை வீழ்ச்சி அடைந் தது.

ரூ.13

கடந்த வார ஏலத்திலும் மந்த நிலை இருந்ததால், பச்சை தேயிலையின் விலையிலும் மாற்றம் எதுவும் இல்லாமல் இருந்தது. ஒரு சில தேயிலை தொழிற்சாலைகளில் சாதாரண வகை பச்சை தேயிலையான 'பி' பிரிவுக்கு ரூ.11.50 முதல் ரூ.13 வரையிலும், 'பி பிளஸ்' பிரிவுக்கு 14 ரூபாயும், 'ஏ' பிரிவுக்கு 16 முதல் 17 ரூபாயும் கடந்த 5–ந் தேதி வரை வார விலையாக வழங் கப்பட்டதாக சிறு தேயிலை விவசாயிகள் கூறினர்.

இது குறித்து சிறு தேயிலை விவசாயி ஒருவர் கூறிய தாவது:–

தற்போது வழங்கப்பட்டு வரும் வார விலை பற்றாக் குறை ஆகும். மாவட்டத்தில் நிலவி வரும் சீதோஷ்ண நிலை காரணமாக பச்சை தேயிலை மகசூல் குறைவாக உள்ளது. இதை கணக்கெடுத்து பார்க் கும் போது வார விலை குறை வாகவே உள்ளது.

பச்சை தேயிலையின் சாதாரண வகைக்கு 15 ரூபாய்க்கு மேல் கிடைத்தால் தான் தற்போது உள்ள நிலவரப்படி கட்டுப்படியாகும். தோட்டத்தையும் பராமரிக்க இயலும். இவ்வாறு அவர் கூறி னார்.

## ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் காய்கறி நாற்று விற்பனை மற்றும் தகவல் மையம் வேளாண் விற்பனை துறை இயக்குனர் தொடங்கி வைத்தார்

கோவை, பிப்.8–

ஆர்.எஸ்.புரம் உழவர்சந்தையில் காய்கறி நாற்று விற்பனை மற்றும் தகவல் மையம் தொடங்கப்பட்டு உள்ளது. இந்த மையத்தை வேளாண் விற்பனை துறை இயக்குனர் தொடங்கி வைத்தார்.

உழவர் சந்தை

கோவை ஆர்.எஸ்.புரம் கவுலிபிரவுன் ரோட்டில் உழவர் சந்தை செயல்பட்டு வருகிறது. இந்த உழவர் சந்தைக்கு தொண்டாமுத்தூர், எஸ்.எஸ்.குளம், பேரூர் ஆகிய பகுதிகளில் உள்ள 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் அரசு பேருந்துகள் மூலமாக காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். நகரின் மைய பகுதியில் அமைந்துள்ள இந்த காய்கறி சந்தையில் தினசரி 100 டன்னுக்கும் அதிகமாக காய்கறி விற்பனை ஆகிறது. இந்த நிலையில் ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் காய்கறி நாற்றுகளான தக்காளி, வெண்டை, கத்தரி, பச்சை மிளகாய், காலிபிளவர் ஆகிய நாற்றுக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை மற்றும் தகவல் மையம் தொடங்கப்பட்டு உள்ளது. இந்த மையத்தை வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை இயக்குனர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்.

விழாவில் வேளாண் விற்பனை துணை இயக்குனர் சுப்பிரமணியம், நிர்வாக அலுவலர் திருப்பதி, உதவி நிர்வாக அலுவலர்கள் சுரேஷ், பாண்டிச் செல்வி. பாரதி பூங்குன்றன், செல்வன், வேளாண் அலுவலர் ரத்தினம் ஆகியோர் பங்கேற்றனர்.

இது குறித்து ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை நிர்வாக அலுவலர் திருப்பதி கூறியதாவது:–

தகவல் மையம்

விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் நலனை கருத்தில் கொண்டு நாற்று விற்பனை தகவல் மையத்தை தொடங்கி உள்ளோம். இந்த மையத்தில் பசுமை குடிலில் வளர்க்கப்பட்ட நோய் தாக்காத வீரிய ஒட்டுரக குழித்தட்டு நாற்றுக்கள் விற்பனை செய்யப்படும். ஒரு நாற்று 40 காசு வீதம் விற்பனை செய்யப்படும். தனியார் நர்சரிகளை விட இங்கு விலை மிகவும் குறைவு. இதனால் விவசாயிகளுக்கு ஒரு மாத கால நாற்று வளர்ப்பு காலம் மிச்சமாகும். பச்சை மிளகாய் நாற்று ஏக்கருக்கு 8 ஆயிரமும், தக்காளி, காலிபிளவர் போன்றவை ஏக்கருக்கு 10 ஆயிரம் நாற்றுக்களும் தேவைப்படும். தேவைப்படும் விவசாயிகள் மற்றும் நுகர்வோர் தினசரி நாற்றுக்களை வாங்கிச் செல்லலாம். இதற்காக இந்த மையத்தை அணுகி முன்னரே பதிவு செய்து கொள்ள வேண்டும்.

மேலும் இந்த தகவல் மையம் வாயிலாக நாற்றுக்கள் கிடைக்கும் இடம், விலை விவரம், தொழில்நுட்ப ஆலோசனைகளை பெறலாம். ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில்

*சராசரியாக தினசரி 100 டன் காய்கறி விற்பனை ஆகிறது. விசேஷ நாட்கள் மற்றும் விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வந்து காய்கறி, பழங்களை வாங்கிச் செல்கின்றனர்.*

## ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தம் மறியல் செய்ய முயன்ற 10 விவசாயிகள் கைது



மேட்டுக்கடை அருகே ராயப்பாளையம் கிராமத்தில் பால் உற்பத்தியாளர்கள் நலச்சங்கத்தின் மாநில பொருளாளர் ராமசாமி தலைமையில் விவசாயிகள் கறவை மாடுகளுடன் சாலை மறியல் செய்தனர்.

*ஈரோடு, பிப்.8–*

*ஈரோடு மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சாலை மறியல் செய்ய முயன்ற 10 விவசாயிகளை போலீசார் கைது செய்தனர்.*

கோரிக்கை

*தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி விலை கட்டுப்படியாகாததால் பால் விலையை உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.*

*இந்த நிலையில், பசும்பால் ஒரு லிட்டருக்கு ரூ.5–ம், எருமைப்பாலுக்கு ரூ.8–ம் உயர்த்தி வழங்க வேண்டும். பிரதம பால் கூட்டுறவு சங்க பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற 2 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் நடத்துவதாக அறிவித்தனர்.*

போராட்டம்

அதைத்தொடர்ந்து நேற்று தமிழகம் முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு இடங்களிலும் பால் உற்பத்தியாளர்கள் நேற்று வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க பொருளாளர் ராமசாமி தலைமையில் நசியனூர் அருகே உள்ள ராயர்பாளையம் கிராமத்தில் சாலை மறியல் போராட்டம் நடந்தது. விவசாயிகள் சிலர், தாங்கள் வளர்த்து வரும் பசு மாடுகளுடன் வந்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சிறிது நேரம் பால் விலையை உயர்த்த வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பிய அவர்கள் பின்னர் அங்கிருந்து கலைந்து சென்றனர்.

10 பேர் கைது

பின்னர் பகல் 12 மணி அளவில் மீண்டும் பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில பொருளாளர் ராமசாமி தலைமையில் சில விவசாயிகள் ஈரோடு–பெருந்துறை ரோடு வாய்க்கால்மேடு பகுதிக்கு வந்தனர். அவர்கள் அங்கு சாலை மறியலில் ஈடுபட முயன்றனர்.

இதுபற்றி தகவல் அறிந்த பெருந்துறை துணை போலீஸ் சூப்பிரண்டு ஜெயசுப்பிரமணியம் தலைமையில் போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து விவசாயிகளை கைது செய்தனர். மொத்தம் 10 விவசாயிகள் கைது செய்யப்பட்டு, பெருந்துறை போலீஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

முன்னதாக பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில பொருளாளர் ராமசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:–

90 சதவீதம் பேர்

தமிழ்நாட்டில் 8 ஆயிரத்துக்கும் அதிகமான பிரதம பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த கூட்டுறவு சங்கங்களுக்கு சுமார் 20 லட்சம் விவசாயிகள் பால் கொடுத்து வருகிறார்கள். தற்போதைய விலைவாசி உயர்வால், பால் உற்பத்தி செலவும் பலமடங்கு அதிகரித்து விட்டது. ஆனால், பாலுக்கான கொள்முதல் விலை உயர்த்தப்படவில்லை. பசும்பாலுக்கு ரூ.5–ம், எருமை பாலுக்கு ரூ.8–ம் உயர்த்தி வழங்க வேண்டும் என்று தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்து வந்தோம். ஆனால், எங்கள் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவேதான் பாலுக்கு விலை உயர்த்தி தர வேண்டும். பிரதம பால் கூட்டுறவு சங்கங்களில் பணியாற்றும் அனைவரையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த போராட்டம் செய்வது என்றும், இந்த

*நாட்களில் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் விற்பனை செய்யமாட்டோம் என்றும் ஏற்கனவே அறிவித்து இருந்தோம். அதன்படி இன்று (அதாவது நேற்று ) போராட்டத்தை தொடங்கி இருக்கிறோம். தமிழ்நாடு முழுவதும் 90 சதவீதம் விவசாயிகள் கூட்டுறவு சங்கங்களுக்கு பால் விற்பனை செய்யவில்லை. சிலர் தனியார் பால் பண்ணைகளுக்கு விற்பனை செய்து உள்ளனர். அதையும் நாளை (அதாவது இன்று) தடுப்போம். அரசு உரிய நடவடிக்கை எடுத்து எங்கள் கோரிக்கையை நிறைவேற்றும்வரை எங்கள் போராட்டம் தொடரும்.*

*இவ்வாறு மாநில பொருளாளர் ராமசாமி கூறினார்.*

*பால் கொள்முதல் குறைந்தது*

*ஈரோடு மாவட்டம் சித்தோடு ஆவின் பால் பண்ணைக்கு தினமும் சுமார் 2 லட்சத்து 3 ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. நேற்று விவசாயிகள் வேலைநிறுத்தம் காரணமாக பால் கொள்முதல் கணிசமாக குறைந்தது. நேற்று வெறும் 40 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது.*

*பால் உற்பத்தியாளர்களின் போராட்டம் தொடரும் பட்சத்தில், பால் கொள்முதல் இன்னும் குறைய வாய்ப்பு உள்ளதாகவும், விவசாயிகள் நேரடியாக பொதுமக்களுக்கு பால் விற்பனை செய்வதால் பொதுமக்கள் அதிக விலை கொடுத்து பால் வாங்க வேண்டியது இருக்கும் என்றும் ஆவின் பால் பண்ணை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.*

## பால் கொள்முதல் விலையை அதிகரிக்க கோரி, இன்று விவசாயிகள், மாடுகளுடன் மறியல் போராட்டம்

*சோமனூர்,பிப்.8–*

*பால் கொள்முதல் விலையை அதிகரிக்க கோரி காங்கயம்– சென்னிமலை ரோட்டில் இன்று விவசாயிகள் மாடுகளுடன் மறியல் போராட்டம் நடத்துகிறார்கள்.*

*வேலைநிறுத்த போராட்டம்*

*தமிழகத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தி விலை கட்டுப்படியாகாததால் பால் விலையை உயர்த்திக்கொடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தினர் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.*

*இந்த நிலையில், பசும்பால் ஒரு லிட்டருக்கு ரூ.5–ம், எருமைப்பாலுக்கு ரூ.8–ம் உயர்த்தி வழங்க வேண்டும். பிரதம பால் கூட்டுறவு சங்க பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டும் என்ற 2 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழகம் முழுவதும் பால்*

உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்த போராட்டம் நடத்துவதாக அறிவித்தனர். அதைத்தொடர்ந்து நேற்று தமிழகம் முழுவதும் பால் உற்பத்தியாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பால் உற்பத்தியாளர்கள் தங்கள் பாலை ஆவின் நிறுவனத்துக்கு வழங்கவில்லை.

விவசாயிகள் நஷ்டம்

இதுகுறித்து கோவை மாவட்ட கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாநில தலைவர் எஸ்.எஸ்.பழனிசாமி கூறியதாவது:–

தமிழ்நாட்டில் 17 ஆயிரம் ஆவின் ஒன்றியங்கள் இயங்கி வருகின்றன. கிராமங்களில் உள்ள ஆவின் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் மையங்களுக்கு விவசாயிகள் பாலை கொடுக்கிறார்கள். அங்கிருந்து பால் ஆவின் ஒன்றியங்களுக்கு கொடுக்கப்பட்டு பொதுமக்களுக்கு வினியோகிக்கப்படுகிறது. விவசாயிகளிடம் இருந்து பசும்பால் லிட்டர் ஒன்றுக்கு 14 ரூபாய்க்கும், எருமைப்பாலுக்கு லிட்டர் ஒன்றுக்கு 20 ரூபாயக்கும் ஆவின் நிறுவனம் கொள்முதல் செய்கிறது. தனியார் நிறுவனங்களை பொறுத்தவரை ஆவின் நிறுவனத்தை விட அதிக விலைக்கு கொள்முதல் செய்கிறார்கள். இதனால் விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்து வருகிறார்கள். தற்போது மாட்டு தீவனம் கிலோ ஒன்றுக்கு 13 ரூபாயும், புண்ணாக்கு கிலோ ஒன்றுக்கு 32 ரூபாயும், தவிடு ஒரு கிலோ 9 ரூபாய்க்கும் விற்பனை ஆகிறது. இதனை வாங்கி மாடுகளுக்கு போட்டு பால் உற்பத்தி செய்து ஆவின் நிறுவனம் லிட்டர் ஒன்றுக்கு வெறும் 14 ரூபாய் வழங்குகிறது. மாட்டு தீவனம் வாங்கும் செலவு கூட இதனால் கிடைக்க மாட்டேங்குது.

மறியல் போராட்டம்

இப்போது ஒரு லிட்டர் தண்ணீர் பாட்டில் 15 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனை மக்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள். எனவே விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு எருமைப்பாலுக்கு 8 ரூபாயும், பசும்பாலுக்கு 5 ரூபாயும் வழங்க வேண்டும். இதனை வலியுறுத்தி இன்று (செவ்வாய்க்கிழமை) காங்கயம்–சென்னிமலை ரோட்டில் நொய்யல்பாலம் அருகே பால்உற்பத்தியாளர்கள் தங்கள் மாடுகளுடன் நடுரோட்டில் சாலை மறியல் போராட்டம் நடத்துகிறார்கள். இதில் சூலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் கலந்துகொள்கிறார்கள்.

இவ்வாறு அவர் கூறினார்.